# Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 27/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 9 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 9 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர். | - | நந்தகோபால் | வட்டம் | - | கள்ளக்குறிச்சி |
| த/பெ. | | தங்கராசு | சமயம் | - | |
| கிராமம் | - | ரிஷிவந்தியம் | வயது | - | 40 |

10.10.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ரிஷிவந்தியம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 25.05.2018 ந் தேதி அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, அரகண்டநல்லூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சந்திரகேசர் என்பவர் அரகண்டநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.159/2015 ச/பி. 294(பி), 323, 354 இதச r/w.4 of TNWH Act படி வழக்கில் முதல் விசாரணை முடித்து மேல் விசாரணைக்கு என் பார்வைக்கு வைக்கப்பட்டதை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு கோப்பினை பார்வையிட்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் தெய்வாணை, அம்பிகா, ஆசாராணி, சேகர், முத்து, சிவலிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்த போது சிறப்பு உதவி ஆய்வாளரிடம் சொன்னதையே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

2. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி தெய்வாணை என்பவர் சிகிச்சை பெற்ற திருக்கோவிலூர் அரசு மருத்துவமனை சென்று மருத்துவர். திரு.பாலகணேசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். இத்துடன் எனது வழக்கு விசாரணை முடித்து எதிரி மீதுச/பி. 294(பி), 323, 354 இதச r/w.4 of TNWH Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இந்த வழக்கானது 2016 வருடத்திய வழக்கு என்று எடுத்து கூறியும், போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.